**<u>CC.46/2022</u>** Dt: 28.12.2023

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.7808/2023 Dt–13.12.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of December 2023.

<u>28.12.2023</u>

<u>அ.சா.1–ராமச்சந்திரன்</u>

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**<u>குறிப்பு:</u>** சாட்சி 27.10.2023ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) எதிரிகள் பெயர் எனக்கு தெரியும். எதிரிகள் இருவரும் எனது உறவினர்கள். எனது வீடும் எதிரிகள் வீடும் அருகருகே தான் உள்ளது. எனது வீட்டிலிருந்து இரண்டு பரலாங்கு தூரத்தில் குளம் உள்ளது. எனது தோட்டத்தின் அருகில் உள்ள கால்வாய் வழியாக ஊரணிக்கு தண்ணீர் செல்கிறது என்றால் சரிதான். 1ம் எதிரி கருமலைக்கண்ணன் சம்பவம் நடந்த தேதிக்கு முதல்நாளில் ஜெசிபி மூலம் வாய்க்கால் தூர்வாரிணார்கள் பொதுமக்கள் உடன் இருந்தார்கள்.

2) எனது தோட்டத்திலிருந்து 1ம் எதிரி கருமலைக்கண்ணன் எனக்கு சொந்தமான சாக்குப்பைகளை வாய்க்கால் அடைப்பதற்கு எடுத்து வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரி கருமலைக்கண்ணன் ஊர் பொதுப்பயன்பாட்டிற்காகத்தான் சாக்குப்பைகளை எடுத்து செல்வதாக என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. வாய்க்கால் செல்வதால் எனக்கு எதுவும் இடையூறு கிடையாது என்றால் சரிதான். நான் சாக்கை ஏன் என்னிடம் கேட்காமல் எடுத்து செல்கிறாய் என்று கேட்டேன் என்று சொன்னால் சரிதான். அப்போது 1ம் எதிரி கருமலைக்கண்ணன் கையால் தலையில் ஓங்கி குத்தி கீழே தள்ளிவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

3) அப்போது அருகில் இருந்த ஊர்பொதுமக்கள் வந்தார்கள் என்றால் இல்லை. களைஎடுத்துக்கொண்டிருந்தவர்கள் வந்தார்கள். நான் உடனே காவல்நிலையத்திற்கு போன் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மகனுடன்

மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, 108 ஆம்புலன்ஸ் மூலமாகத்தான் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். 2ம் எதிரி ஹரிஹரன் எனது இடது காலில் மிதித்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கீழத்தூவல் காவல்நிலையம் 5 மைல் தூரம் இருக்கும். ஆம்புலன்சிற்கு எனது மருமகன் செந்தில் போன் செய்தார். எனக்கு காயம் ஏற்பட்ட உடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4) பரமக்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் எதிரிகள் தலையிலும், காலிலும் தாக்கியதாக கூறினேன் என்றால் சரிதான். எனது வீடு கான்கிரிட் வீடு என்று சொன்னால் சரிதான். எதிரிகள் ஓட்டுவீட்டில் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். ஊர்பொதுமக்களோ, ஊர்த்தலைவரோ என்னை கண்டித்தார்களா என்றால் இல்லை. பொதுப்பிரச்சனைக்காகத்தானே சாக்குபை எடுத்தார் எதற்காக இந்த பிரச்சனை செய்கிறாய் என்று ஊர்த்தலைவர் என்னிடம் கேட்டார் என்று சொன்னால் இல்லை. ஊர்மக்கள் அதிலிருந்து எனது குடும்பத்திடம் பேசமாட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

5) புகார் மனுவை மருத்துவமனையில் இருக்கும்போது நான் கைப்பட எழுதினேனா என்றால் இல்லை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள். போலிசார் என்னை மருத்துவமனையில்வைத்து தான் விசாரித்தார்கள். போலிசாரிடம் கூறிய விபரத்தை தான் முதல்விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். அதன்பின்பு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஊர்பொதுமக்கள் என்னிடம் பேசாததால் எதிரிகள் மீது எனக்கு கோபம் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மீது உள்ள விரோதத்தால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**CC.46/2022** Dt: 28.12.2023

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.7808/2023 Dt–13.12.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of December 2023.

28.12.2023

அ.சா.2–முனியம்மாள்

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறிப்பு:** சாட்சி 27.10.2023ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எதிரிகள் இருவரும் எனது உறவினர்கள். எனது வீடும் எதிரிகள் வீடும் அருகருகே தான் உள்ளது என்றால் சரிதான். ஊர்குளத்திற்கு கால்வாய் மூலமாக தண்ணீர் கொண்டு சென்றார்கள் என்றால் சரிதான். ஜெசிபியை வைத்து கால்வாய்யை தூர்வாரிணார்கள் என்றால் சரிதான். என்னிடம் கேட்காமல் 5 சாக்குகள் எடுத்து சென்றிருப்பார் என்றால் சரிதான். எனது கணவர் அசா.1 கேட்கும்போது நான் தோட்டத்தில் களைஎடுத்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். பக்கத்துதோட்டத்திலும் களைஎடுத்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

2) அப்போது அங்கிருந்தவர்கள் சண்டை நடப்பதாக கூறியதால் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சண்டையை விலக்கிவிட்டோம் என்றால் சரிதான். சண்டை முடிந்தபின்பு தான் நான் சென்றேன் என்றால் இல்லை சண்டை நடந்துகொண்டிருக்கும்போதே நான் சென்றேன். தண்ணீர் கொண்டு செல்வது தொடர்பாக ஊர்பொதுமக்கள் யாரும் எங்களுடன் பேசவில்லை என்று சொன்னால் சரிதான். ஊர்பொதுமக்கள் எதிரிகளுக்கு சாதாகமாக பேசினார்கள் என்று சொன்னால் சரிதான். போலிசார் என்னை தோட்டத்தில் வைத்து விசாரித்தார்கள்.

3) நான் முதல்விசாரணையில் கூறிய விபரத்தை தான் போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். எதிரிகள் மீது உள்ள விரோதத்தால் எனது கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் என்னிடம் கூறிய பின்பு எதிரிகள் எவ்வாறு அடித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவந்தது என்றால் இல்லை நான் நேரடியாக பார்த்தேன். 1ம் எதிரி எனது கணவரின் தலையில் அடித்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் எதிரி எனது கணவரின் இடதுகாலில் மிதித்தார் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>CC.46/2022</u>** Dt: 28.12.2023

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.7808/2023 Dt–13.12.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of December 2023.

28.12.2023

அ.சா.3–செந்தில்

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறிப்பு:** சாட்சி 27.10.2023 ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது சொந்த ஊர் ஆம்பல்கூட்டம் என்றால் சரிதான். எனது ஊருக்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவம் நடந்த அன்று எனது மாமா அசா.1 எனக்கு போன் செய்து தகவல் கூறினார் என்றால் இல்லை நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். சம்பவம் நடப்பதற்கு அரைமணிநேரத்திற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு நான் வந்தேன். எதிரிகளுக்கும், எனக்கும் ஏற்கெனவே முன்விரோதம் என்றால் இல்லை. என்மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் இல்லை.

2) 1ம் எதிரி கருமலைக்கண்ணன் பொதுசாக்கை எடுப்பதற்கு உனக்கு என்னடா என்று அசா.1 ன் தலையில் குத்திவிட்டார். 2 ம் எதிரி இடதுகாலில் மாறி மாறி அடித்தார் என்று சொன்னால் சரிதான். அசா.1 ன் போனை எடுத்து நான் தான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து எனது மாமா அசா.1 யை சிகிச்சைக்கு அனுப்பினேன். ஊர்பொதுமக்களும், நானும், எனது அத்தையும் சேர்ந்து சண்டையை விலக்கிவிட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.